**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 02 - 2023**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 யூன் 03 ஆம் திகதிய 3029 எஸ்ஆர்ஜ மற்றும் 3030 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.10(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளின் வினைத்திறன் மற்றும் நிதி நிலைபேறான தன்மையை முன்னேற்றுவதே நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டம் 2 இன் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 15,340 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 118 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 9,100 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் அல்லது நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 59.3 சதவீதத்தை ஆசிய அபிவிருத்தி வங்கியின் சாதாரண மூலதன வளங்களால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 2,340 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 18 மில்லியன் அல்லது நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 15.3 சதவீதம் ஆசிய அபிவிருத்தி நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 3,900 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 30 மில்லியன் மிகுதித் தொகை அல்லது 25.4 சதவீதம் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. மேலும், நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயத்தில் ரூபா 13,917 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 107.05 மில்லியன் ஒதுக்கீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் நடவடிக்கைகளிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த அதேநேரம் கொழும்பு மாநகர சபையால் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் நடவடிக்கைகளிற்காக ரூபா 1,423 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 10.95 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கையானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் அமுல்ப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்களை கொண்டுள்ளது. நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 ஆனது அதன் நடவடிக்கைகளை 2014 செத்தெம்பர் 03 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. பின்னர் நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் காலப்பகுதியானது 2024 பெப்ரவரி 29 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2:1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கங்களை தவிர்த்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு வீட்டு நீர் மானிகளை கொள்வனவு செய்வதற்காக LC ஐ திறப்பதற்காக ICB 3 பிரதான ஒப்பந்ததாரருக்கு ரூபா 870 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், அந்தத் தொகையானது சபையிடமிருந்து பெறவேண்டியவையாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக GOSL பங்களிப்பிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. | 870 | இந்த அணுகுமுறை ஒப்பந்த விலையை மேம்படுத்துவதற்கான அங்கீகார கட்டத்தில் SCAPC ஆல் ஏற்கனவே மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளது, மேலும் ஒப்பந்த நோக்கெல்லைக்கு வெளியே பொருட்களை கொள்வனவுசெய்வதற்கு தேவையான அமைச்சரவை அங்கீகாரத்துடன் GOSL எதிரிணை நிதிகள் மூலம் அதைச் செலுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தற்போது தேவையான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளோம். | செயற்திட்ட நிதியை முறையான அங்கீகாரம் பெறாமல் செயற்திட்டத்தின் நோக்கங்களைத் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தக் கூடாது, கணக்கு பிழையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 1657.87 மில்லியன் தொகையான மதிப்புள்ள இணைப்பு பொருட்கள் மற்றும் ரூபா 293.85 மில்லியன் தொகையான இரசாயனங்கள் | 1,951.72 | இந்த அணுகுமுறை ஒப்பந்த விலையை மேம்படுத்துவதற்கான அங்கீகார கட்டத்தில் SCAPC ஆல் ஏற்கனவே மதிப்பாய்வு | செயற்திட்ட நிதிகளை செயற்திட்டத்தின் நோக்கெல்லைக்குள் பயன்படுத்துவதற்கு விசேட கவனம் |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்ட நிதிகளைப் பயன்படுத்தி சபைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் உரிய செலவினங்கள் சபையிடம் இருந்து பெறவேண்டியவைகளாகப் பதிவுசெய்வதற்குப் பதிலாக நிதிக்கூற்றுக்களில் செயற்திட்டச் செலவினங்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதன் விளைவாக, ICB 4 மற்றும் ICB 3 ஒப்பந்தங்களின் நடைமுறை வேலை பெறுமதி முறையே ரூபா 1657.87 மில்லியன் மற்றும் ரூபா 293.85 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | செய்யப்பட்டுள்ளதுடன் ஒப்பந்த நோக்கெல்லைக்கு வெளியே பொருட்களை கொள்வனவு செய்வதற்கு தேவையான அமைச்சரவை அங்கீகாரத்துடன் GOSL எதிரிணை நிதிகள் மூலம் செலுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தற்போது தேவையான அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளோம். | செலுத்தப்பட வேண்டும். மேலும் விசேட தேவைகளின் போது நிதிகளை விடுவிப்பதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (இ) | மற்றொரு செயற்திட்டத்தின் (கடன் இல. 2948-SRI) பணவளிப்பு இறுதி திகதிக்கு பின்னர் ஏற்பட்ட செலவினங்களை தீர்ப்பனவு செய்வதற்கு ரூபா 12.3 மில்லியன் தொகையான செயற்திட்ட நிதிகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. 2023 சனவரி 03 இல் செயற்திட்டப் பணிப்பாளரால் வழங்கப்பட்ட எழுத்துமூல அறிவுறுத்தலின் பிரகாரம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் வங்கிக் கணக்கில் ரூபா 10.7 மில்லியன் தொகையை ICB 03 இன் பிரதான ஒப்பந்ததாரர் (சைனா காபர் எஞ்சினியரிங் - சைனா ஜியோ கோர்ப்பரேஷன் கூட்டுமுயற்சி) வைப்பு செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த செயற்திட்டத்தின் பிரதான நோக்கத்தை மீறி NWSDB மேலே குறிப்பிட்டுள்ளவாறு ஐ.அ.டொலர் 28,543 பயன்படுத்தப்படாத முற்பண மீதியை மீளளிப்பதற்கு அந்தப் பணத்தைப் பயன்படுத்தியிருந்தது. | 12.3 ADB 2948-SRI, ஐ.அ.டொலர் 28,543.22 ஐ மீளளிக்குமாறு கோரிய போது, நாங்கள் மேலதிக பொது முகாமையாளரிடம் (நிதி) செயற்திட்டத்தின் GOSL நிதியை அல்லது சபை நிதியை ஏற்பாடு செய்வதற்கு கோரியிருந்தோம். எனினும், அதில் GOSL மற்றும் சபை நிதிகள் இரண்டிலும் நிதி கிடைக்கவில்லை. எனவே, பொது முகாமையாளரின் (NWSDB) அங்கீகாரத்துடன், ICB-03 ஒப்பந்ததாரர் மூலம் மீள்கொடுப்பனவு ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் ஒப்பந்தத்தின் பிரகாரம் தற்காலிகத் தொகையின் கீழ் செய்யப்படும் அனைத்து வேலைகளுக்கும் ஒப்பந்ததாரரின் 15% மேந்தலை மற்றும் இலாபத்தை செலுத்த வேண்டியுள்ளது. | சிக்கல்களை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் செயற்திட்ட நிதியை முறையான அங்கீகாரம் பெறாமல் செயற்திட்டத்தின் நோக்கங்களை தவிர ஏனைய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த கூடாது, அத்துடன் கணக்கு பிழையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மேற்படி கொடுக்கல்வாங்கலை தீர்ப்பனவு செய்வதற்காக, செயற்திட்டம் ஒப்பந்ததாரருக்கு முரண் கட்டளை மூலம் ரூபா 1.6 மில்லியனாக இருந்த அவரது தரகு உள்ளடங்கலாக ரூபா 12.3 மில்லியன் தொகையை செலுத்தியிருந்ததுடன் அந்தத் தொகை ADB கடனாகவும் செயற்திட்டம் II இன் சிவில் வேலை செலவினமாகவும் கணக்கீடு செய்யப்பட்டது. அதன் பிரகாரம், ADB கடன் மற்றும் சிவில் நடைமுறை வேலை கணக்கின் பெறுமதி அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. இறுதியாக, NWSDB இடமிருந்து பெறவேண்டிய நிதியாக இனங்காணப்படுவதற்குப் பதிலாக அரசாங்கத்தின் பங்களிப்புக்கு எதிராக ரூபா 10.7 மில்லியன் தொகை சிவில் நடைமுறை வேலைக் கணக்கில் இருந்து பதிவழிப்பு செய்யப்பட்டிருந்தது. ரூபா 12.3 மில்லியன் தொகையானது, மூலதன நடைமுறை வேலை கணக்கில் தவறுதலாகப் வரவு வைக்கப்பட்டுள்ள போதிலும் பிழையைச் சீர்செய்வதற்காக ரூபா 10.7 மில்லியன் மாத்திரமே நடைமுறை வேலை கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, மூலதன நடைமுறை வேலையின் வேறுபாடு ரூபா 1.6 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. மேலும், அந்த கொடுக்கல்வாங்கல் நீர் வழங்கல் சபையில் இருந்ததன் காரணமாக ஏற்பட்ட ரூபா 1.4 மில்லியன் அந்நிய செலாவணி ஆதாய தொகை NWSDB இடமிருந்து பெறவேண்டிய நிதியாக இனங்காணப்படுவதற்குப் பதிலாக நிதிக்கூற்றுக்களில் அந்நிய செலாவணி இழப்பாக தவறாக இனங்காணப்பட்டிருந்தது. | இணங்கப்பட்டது. | பிழையை சீர்செய்து எதிர்காலத்தில் சரியான கணக்கீட்டு நடைமுறைகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டில் ரூபா 6.99 மில்லியன் பணிக்கொடை கொடுப்பனவு கணக்கிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, செயற்திட்டத்தின் மொத்த பணிக்கொடை செலவு அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டது. | 6.99 | இணங்கப்பட்டதுடன் பணிக்கொடை செலவு அதற்கிணங்க சீர்செய்யப்படும். | சரியான கணக்கு பதிவேடுகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாண இல. 502(2) | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு, நிலையான சொத்துகளை கைப்பற்றும் பணி நடைபெற்று வருகிறது. | நிதிப்பிரமாணங்களுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாண இல. 128(1)உ, இல.507, இல.756 | வருடாந்த நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னர் வருடாந்த பொருள் மெய்மையாய்வு பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் இது 2024 மே 02 வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. ஒரு மாத காலத்திற்குள் பூர்த்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களுடன் இணங்க வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 பௌதீக முன்னேற்றம்

2014 செப்தெம்பர் 03 இல் இச் செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை தொடங்கியதுடன் அடிப்படை உடன்படிக்கை மற்றும் நடைமுறைப்படுத்தல் திட்டத்தின் பிரகாரம் 2019 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. எனினும் செயற்திட்டத்தின் எதிர்பார்த்த இலக்கை அடைந்துகொள்ள முடியாதிருந்ததுடன் 2024 பெப்ரவரி 29 வரை செயற்திட்டத்தின் காலப்பகுதி நீடிக்கப்பட்டிருந்தது. சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 100 சதவீதம் மற்றும் 84 சதவீதமாக இருந்தது.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வீட்டு இணைப்பு பரிமாற்றங்களை வழங்குதல், பழைய குழாய் வரிசைகளை செயலிழக்கச் செய்தல், வீதி மறுசீரமைப்பு பணிகள், கட்டிட வரைபடங்கள் மற்றும் சொத்து மூலதனமாக்கல் பணிகள் போன்ற நிலுவை பணிகள் முடிவுறுத்தல் திகதியான 2024 பெப்ரவரி 29 இற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், இறுதி நீடிப்பு திகதிக்கான அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் செயற்திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. | கழிவுநீர் உட்கட்டமைப்புக்களை அமைப்பதற்கு ஒரு இணையான CMC செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டு CMC கொழும்பு நகரத்தின் அனைத்து வீதிகளையும் ஒரே நேரத்தில் தொந்தரவு செய்வதற்கு NWSDB ஐ அனுமதிக்காததால் முக்கியமாக ICB-04 பகுதியில் வீதி அகழ்விற்கான CMC அங்கீகாரம் தாமதம் காரணமாக தாமதங்கள் ஏற்படுகின்றன. | மேலதிக தாமதமின்றி நாட்டிற்கு நட்டம் ஏற்படாமல், திட்டமிட்டவாறு செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 69 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 230,035 தொகையான 19 19 DMA மானிகள் ICB ஒப்பந்தம் 03 இன் கீழ் 19 மாவட்ட அளவீட்டுப் பகுதிகளில் நீர் ஓட்ட அளவீட்டுத் தரவைச் சேகரிப்பதற்காக நிறுவப்பட்டுள்ளன. எனினும், மேலே உள்ள 19 மானிகளில் 17 மானிகள் 2023 திசெம்பர் 31 அளவில் செயலற்ற நிலையில் இருந்தன. அந்த மானிகள் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 3 ஆண்டு உற்பத்தி உத்தரவாதத்துடன் கொள்வனவு செய்யப்பட்டன, மேலும் அவை கொள்வனவு செய்த திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் கடந்த பின்னர் நிறுவப்பட்டன. மேலும், 16 மானிகளின் உத்தரவாதக் காலப்பகுதி அவை நிறுவப்படுவதற்கு முன்னர் காலாவதியாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2017 இல் வழங்கப்பட்ட ICB-03 & 04 இல் கொள்வனவு தாமதம் ஏற்பட்டது. எனவே ICB-03 & 04 இல் DMA மானிகளை நிறுவுவது தாமதமாகியது. உத்தரவாதக் காலத்தை அதிகரிப்பதற்கு ஒப்பந்ததாரருடன் (அதாவது வழங்குநர்) பல கலந்துரையாடல்களை நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம். | இந்த பெறுகை தோல்விகளுக்கு முகாமைத்துவம் பொறுப்பேற்க வேண்டும். மேலும் ஏற்கனவே உள்ள சிக்கல்களை சீர்செய்து எதிர்பார்த்த முடிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வருமானம் அல்லாத நீரை முகாமை செய்வதற்காக நீர் ஓட்ட அளவீட்டுத் தரவுகளை சேகரிப்பதற்காக, கொழும்பு நகரின் தெற்குப் பகுதியின் 23 மாவட்ட அளவீட்டுப் பகுதியில் (DMAs) ICB ஒப்பந்தம் 04 இன் கீழ் ஐ.அ.டொலர் 246,337.80 (தற்போதைய பெறுமதி ஏறத்தாழ ரூபா 73.9 மில்லியன்) பெறுமதியான 23 DMA மானிகள் நிறுவப்பட்டுள்ளன. எனினும், 2024 மே 02 இல் கணக்காய்வின் போது அந்த மானிகள் அனைத்தும் பழுதடைந்து, சில மானிகள் 2021 முதல் செயற்படாமல் இருப்பது அவதானிக்கப்பட்டது. இந்த பிரச்சனை காரணமாக அனைத்து மாவட்ட அளவீட்டு பகுதிகளிலும் NRW முகாமைத்துவ நடவடிக்கைகளை செயற்திறனாக அமுல்ப்படுத்துவது கடுமையாக பாதிக்கப்பட்டது. | முக்கியமாக பட்டரியின் ஆயுட்காலம் விஞ்சப்பட்டு இருப்பதால், ஓட்ட மானிகள் NRW கட்டுப்பாட்டு அறைக்கு தரவை அனுப்புவதில்லை. எனவே, ADB பரிந்துரைத்த உள்ளூர் முகவர் மூலம் பட்டரிகளை மாற்றும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளதுடன் அது நடைபெற்று வருகிறது. | தற்போதுள்ள பிரச்சனைகளை சீர்செய்து, எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | NRW முகாமைத்துவ மென்பொருள், உத்தரவாத சான்றிதழ்கள் மற்றும் அனைத்து வகையான மொத்த நீர் மானிகள், சேர்வர்கள், UPS முறைமை, AC அலகுகள், மொனிட்டர் டிஸ்ப்ளே பனல்கள் (Monitors Display panels) போன்ற இயந்திர மற்றும் மின் சாதனங்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் முகவர்களிடமிருந்து எடுக்கப்பட்ட கடிதங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபையின் O&M பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | O&M ஆனது NRW கட்டுப்பாட்டு அறையை ஆக்கிரமித்து, 2022 முதல் செயற்திட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட வசதிகளைப் பயன்படுத்துகிறது. தேவையான அனைத்து ஆவணங்களும் ஏற்கனவே O&M இற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. | மேலதிக தாமதமின்றி மிகுதி மின் சாதனங்களை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக ICB 3 பிரதான ஒப்பந்ததாரரால் இறக்குமதி செய்யப்பட்டிருந்த ரூபா 51.36 மில்லியன் (ஏறத்தாழ) பெறுமதியான ”NWS&DB” என குறியீடிடப்பட்ட 6548 Ningbo வகை உள்நாட்டு நீர் மானிகளின் இருப்பு 2023 இல் ஒப்பந்ததாரர் காவலில் வைக்கப்பட்ட போது தவறவிடப்பட்டன. இதற்கிடையில், மேலே உள்ளவற்றில் 913 மானிகள் தனியார் கம்பனியில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது.<br><br>மேற்படி இழப்புக்கள் மற்றும் மோசடிகள் இடம்பெற்று ஓராண்டுக்கு | ஒப்பந்தத்தின் பிரகாரம் களஞ்சிய வசதியை பேணுவது ஒப்பந்ததாரரின் பொறுப்பாகும். சிக்கல் கண்டறியப்பட்டதும் பொருள் இழப்புக்கு எதிரான சட்ட நடவடிக்கை செயற்திட்ட முகாமையாளர் மற்றும் NWSDB உள்ளக கணக்காய்வு பிரிவால் தொடங்கப்பட்டது. பல கலந்துரையாடல்களுக்குப் பின்னர், இழந்த நீர் மானிகளை வழங்குவதற்கு ஒப்பந்ததாரர் இணங்கினார், மேலும் ஒப்பந்ததாரரால் ஏதேனும் பொருள் இழப்பு ஏற்பட்டால், ஒப்பந்தத்தின் நிபந்தனையின் | எதிர்காலத்தில் மோசடி நடவடிக்கைகளைத் தவிர்ப்பதற்கு இருப்புக்கள் மீது வலுவான உள்ளக கட்டுப்பாடுகள் பேணப்பட வேண்டும். மேலும் இந்த மோசடி காரணமாக ஏற்பட்ட நட்டங்கள் பொறுப்பான நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேல் கடந்திருந்த போதிலும் அந்த நட்டத்தை அறவிடுவதற்கும் பொறுப்பான உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் செயற்திட்ட முகாமைத்துவம் நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | பிரகாரம் அவர்களின் இறுதி விலைப்பட்டியலில் இருந்து கழிக்கப்படும் என்று ஒப்பந்ததாரருக்கு ஏற்கனவே தெரிவிக்கப்பட்டது. | |

**3.3 செயற்திட்ட நோக்கங்களிற்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட புறம்பான செயற்பாடுகள்/ கொடுப்பனவுகள்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ICB 3 ஒப்பந்ததாரருக்கு செயற்திட்டத்தின் நோக்கங்களை மீறி நீர் சபைக்கு தேவையான ரூபா 870 மில்லியன் 122,500 உள்நாட்டு நீர் மானிகள் மற்றும் 100,000 எண்ணிக்கையான Gunmetal ferrules இற்கான நாணயக் கடிதத்தை திறத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தவிர மேலும் 15 சதவீதம் அல்லது ரூபா 254 மில்லியன் ஒப்பந்ததாரர்களின் இலாபம் மற்றும் மேந்தலைகள் மேற்படி விநியோகங்களுக்கு முறையான அனுமதியின்றி செலுத்தப்பட்டுள்ளது. | 2022 இல் நிலவிய ஐ.அ.டொலர் நெருக்கடியின் போது, NWSDB நீர் மானிகள், இரசாயனங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தங்களுக்கு LC ஐ திறப்பதில் சிரமம் ஏற்பட்டது. இந்த நெருக்கடியை முகாமை செய்வதற்கு, NWSDB சபை அங்கீகாரத்துடன், பொது முகாமையாளர் (NWSDB) ICB-03 & ICB-04 மூலம் பெறுகையை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தினார். | செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு செயற்திட்ட நிதிகள் பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் ஏற்கனவே ஏனைய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட பணத்தை மீளளிக்க வேண்டும். |
| (ஆ) | ADB செயற்திட்டம் 01 இன் பயன்படுத்தப்படாத ஐ.அ.டொலர் 28,543.22 கடன் முற்பணத்தை திருப்பிச் செலுத்துவதற்காக இந்த செயற்திட்டத்தின் ICB 3 இன் முதன்மை ஒப்பந்ததாரர் மூலம் நீர் வழங்கல் சபை ADB இற்கு ரூபா 9.2 மில்லியனை செலுத்தியிருந்தது. எனினும் ஒப்பந்ததாரர் செயற்திட்டம் 02 இன் இடைக்கால கொடுப்பனவு சான்றிதழில் அந்தக் கொடுப்பனவை சேர்த்துள்ளதுடன் ரூபா 1.6 மில்லியன் தொகையான 15 சதவீத இலாபம் மற்றும் மேந்தலை எல்லையுடன் மீள்நிரப்பு செய்யப்பட்டது. மேலும் இந்த கொடுக்கல் வாங்கல் மூலம் நீர் வழங்கல் சபை ரூபா 1.45 மில்லியன் அந்நிய செலாவணி ஆதாயத்தை தக்கவைத்துள்ளமை அவதானிக்கப்பட்டது. | ADB 2948-SRI, ஐ.அ.டொலர் 28,543.22 ஐ மீளளிக்குமாறு கோரிய போது செயற்திட்டம் அல்லது சபை நிதிகளின் GoSL நிதியை ஏற்பாடு செய்யுமாறு Addl.GM (நிதி) இடம் கோரியுள்ளோம். எனினும், அதில் GoSL மற்றும் சபை நிதிகள் இரண்டிலும் நிதி கிடைக்கவில்லை. எனவே, பொது முகாமையாளரின் (NWSDB) அங்கீகாரத்துடன், ICB-03 ஒப்பந்ததாரர் மூலம் மீள்கொடுப்பனவு ஏற்பாடு செய்யப்பட்டது. ஒப்பந்தத்தின் பிரகாரம் தற்காலிகத் தொகையின் கீழ் செய்யப்படும் அனைத்து வேலைகளுக்கும் ஒப்பந்ததாரரின் 15% மேந்தலை மற்றும் இலாபத்தை செலுத்த வேண்டும். | செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு செயற்திட்ட நிதிகள் பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் ஏற்கனவே ஏனைய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட பணத்தை மீளளிக்க வேண்டும். |

**3.4 சர்ச்சைக்குரிய நடவடிக்கைகள்**

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| செயற்திட்டத்திற்கு DMA மானிகளை கொள்வனவு செய்யும் போது NWSDB மற்றும் DMA மானி வழங்குநர் இடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம் மின்காந்த ஓட்ட மானிகளை உற்பத்தி செய்யும் நாடு ஐக்கிய இராச்சியமாக இருக்க வேண்டும், எனினும் செயற்திட்டம் சீனாவில் தயாரிக்கப்பட்ட DMA மானிகளை கொள்வனவு செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது.<br><br>– மேற்படி உடன்படிக்கையின் பிரகாரம், தெரிவுசெய்யப்பட்ட வழங்குநர் DMA மானிகளுக்கு உற்பத்தியாளரால் பரிந்துரைக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் முகவராக குறிப்பிடப்பட்டுள்ளார். எனினும், முகவரும் செயற்திட்டமும் இரு தரப்பினருக்கும் இடையே வலிதான உடன்படிக்கையை சமர்ப்பிக்கத் தவறியதை நிரூபிப்பதற்கு கணக்காய்விற்கு சான்று கிடைத்திருக்கவில்லை.<br><br>– ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உற்பத்தி உத்தரவாத உறுதிப்படுத்தலின் பிரகாரம், DMA மானிகளின் உற்பத்தியாளர் 5 | கேள்வி சமர்ப்பிப்பின் பிரகாரம் ஓட்ட மானிகள் ஐக்கிய இராச்சியத்தில் தயாரிக்கப்பட்டு, அளவீடு செய்யப்பட்டு சீனாவிலிருந்து அனுப்பப்பட்டவை என்பதை வழங்குநர் உறுதிப்படுத்தியுள்ளார்.<br><br>ஒப்பந்தத்தின் முடிவில், மானிகளை வழங்கி நிறுவிய பின்னர் மாத்திரமே உள்ளூர் முகவரின் சேவை தேவைப்படுகிறது. அதன் பிரகாரம், உள்ளூர் முகவரின் சேவையைத் தேடிய போது கேள்வி கட்டத்தில் முன்மொழியப்பட்ட கம்பனியை கண்டுபிடிக்க முடியவில்லை, மேலும் உற்பத்தியாளரின் பிராந்திய அலுவலகத்தின் அங்கீகாரத்துடன் புதிய உள்ளூர் முகவரை வழங்குநர் மீண்டும் முன்மொழிந்தார். அதன் பிரகாரம், புதிய உள்ளூர் முகவரின் சேவை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு, அவர்களின் மதிப்பாய்வுக்காக O&M இற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>உற்பத்தியாளரின் உத்தரவாதக் கடிதத்தின் பிரகாரம், 2014 திசெம்பர் 25 ஆம் திகதிய உற்பத்தியாளரின் கடிதத்திலிருந்து ஆறு மாதங்களுக்குள் பெறப்பட்ட கட்டளை உறுதிப்படுத்தல் வழங்கப்பட்டால் உத்தரவாதத்தை ஐந்து ஆண்டுகளுக்கு நீடிக்க முடியும் என்று கூறப்பட்டுள்ளது. எனினும், உத்தரவாதத்திற்கான உற்பத்தியாளரின் கடிதத்திலிருந்து 9 மாதங்களுக்குப் பின்னர் 2015 செப்தெம்பர் 03 இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. எனவே, உத்தரவாதமானது மூன்று வருடங்களாக உள்ளது. | செயற்திட்ட முகாமைத்துவம் ஒப்பந்த நிபந்தனைகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். மேலும் இந்த பெறுகையின் உண்மையான நிலைமையை வெளிப்படுத்துவதற்கு விசாரணை செய்யப்பட வேண்டும். |

ஆண்டு உத்தரவாதக் காலப்பகுதியை வழங்குவதற்கு இணங்கியிருந்தார், ஆனால் செயற்திட்டம் விநியோக திகதியிலிருந்து 3 ஆண்டு உத்தரவாதக் காலப்பகுதியை மாத்திரமே எடுப்பதற்கு இணங்கியிருந்தது.

## 3.5 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத/ குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தெலவால பயிற்சி நிலையம் (CEWAS) செயற்திட்டத்தின் திறன் மேம்பாட்டு முன்மொழிவின் கீழ் ரூபா 1,571 மில்லியன் கிரயத்தில் கட்டப்பட்டதுடன் இது 2022 திசெம்பரில் திறக்கப்பட்டது. மேலும் செயற்திட்ட முன்மொழிவின் பிரகாரம் இது வணிக நோக்கத்திற்காகவும் பயன்படுத்தலாம். மீளாய்வாண்டின் போது ரூபா 41.63 மில்லியன் செயற்பாட்டுச் செலவினங்களாக செய்யப்பட்டுள்ளதுடன் மொத்த வருமானம் ரூபா 27.28 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம், ரூபா 14.35 மில்லியன் தொகையான இழப்பு பதிவு செய்யப்பட்டது. மேலும் ரூபா 7.22 மில்லியன் பெறுமதியான முழு வசதியுடன் கூடிய அலுவலக வளாகம் (337.5 சதுர மீட்டர்), 2 கணனி ஆய்வுகூடங்கள், தளபாடங்கள் கொண்ட நூலக வளாகம் மற்றும் ரூபா 4.1 மில்லியன் பெறுமதியான உடற்பயிற்சி கூடம் ஆகியவை திறந்த திகதி முதல் எவ்வித உபயோகமும் இன்றி விளைவற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. | GCWWMIIP செயற்திட்டமானது தெலேவால பயிற்சி நிலையத்தை உருவாக்கி, 2022 திசெம்பர் மாதத்தில் NWSDB இடம் செயற்படுவதற்கு ஒப்படைத்தது. பயிற்சி நிலையத்தின் (CEWAS) வணிகச் செயற்பாட்டைக் கவனிப்பதற்கு NWSDB ஆல் வேறுபட்ட அலகு அமைப்பு உள்ளது. இந்தக் குறிப்பிட்ட ஐயவினாவில் கூறப்பட்டுள்ள வருமானம் மற்றும் செலவினத் தொகைகள் பயிற்சி நிலைய செயற்பாட்டிற்காக நிறுவப்பட்டுள்ள மேற்கூறிய அலகுடன் சரிபார்க்கப்பட வேண்டும். | இந்த நிர்மாணங்களிற்காகச் செலவிடப்பட்ட பணப்பெறுமதியை பெற்றுக்கொள்வதற்கு மொத்த சொத்துக்களையும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வருமானமல்லாத நீர் சதவீதத்தை 18 வீதத்திற்கும் குறைவாகக் குறைப்பதன் மூலம் சிறந்த நீர் விநியோக சேவைகளை வினைத்திறனான முறையில் வழங்கும் நோக்கத்துடன் | ஏற்கனவே உள்ள நீர் வழங்கல் திட்டத்தின் கட்டிட விபரங்கள் கிடைக்காதமை, எதிர்பாராத தள நிலைமைகள், வேலை நேரம் பெரும்பாலும் இரவு நேரத்திற்கு வரையறுக்கப்பட்டுள்ளமை, அங்கீகார | நாட்டிற்கு மேலும் நிதிச்சுமை ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டம் – 02 ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டம் தொடங்கப்பட்ட திகதியிலிருந்து 111 மாதங்கள் கடந்த பின்னர் 42 DMAs இல் 25 DMAs மாத்திரமே முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டு, NWSDB இடம் ஒப்படைக்கப்பட்டன. எனினும், கடன் மீள்கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் முறையே ரூபா 95.11 மில்லியன் மற்றும் ரூபா 1,852.47 மில்லியன் தொகையான கடப்பாட்டு மற்றும் வட்டிக் கட்டணங்கள் உட்பட ரூபா 4,293.25 மில்லியன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்தால் செலுத்தப்பட்டுள்ளது. | தாமதங்கள், 2019 ஏப்ரலில் குண்டுவெடிப்பு மற்றும் செயற்திட்ட நீடிப்புக்கான தொற்றுநோய் சூழ்நிலையில் இடையூறுகள் போன்ற பல கட்டுப்படுத்த முடியாத காரணங்களாகும். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.6 செயற்திட்ட நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு மாநகர சபைக்கு ICB-4 ஒப்பந்தத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்ட வீதிகள் தொடர்பான ரூபா 164.46 மில்லியன் தொகையான பிணை வைப்பை அறவிடுவதற்கு செயற்திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மேலதிக தாமதமின்றி பிணை வைப்பை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் திருத்தப்பட்ட பூர்த்தி செய்தல் திகதியின் பின்னர் 2 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் ரூபா 14,599 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டின் இறுதியளவில் இலக்காகக் கொண்ட ஒப்பந்தங்களின் இறுதி விலைப்பட்டியல்களை நாங்கள் பூர்த்தி செய்தவுடன் அது பூர்த்தியடையும். | NWSDB இற்கு முறையாக சொத்துக்களை ஒப்படைப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் கீழும் நி.பி. 66 மூலமும் செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த ஒதுக்கீடு ரூபா 312 மில்லியனாக இருந்ததுடன் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 478 மில்லியனாக இருந்தது. இதனால், ஒதுக்கீட்டிற்கு அப்பால் ரூபா 166 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது. | நி.பி. 66 ஒதுக்கீட்டுடன் இணங்கப்பட்டதுடன் எமது ஏட்டின் பிரகாரம் ஏற்பட்ட செலவினம் ரூபா 372 மில்லியன் ஆகும். | வருடாந்த பாதீடானது கூற்று ஒன்றைத் தவிர பயனுள்ள நிதி முகாமைத்துவக் கருவியாகப் பயன்படுத்தப்பட வேண்டும். |